# ஆர்ப்பாட்டத்தில் ஆர்த்தெழுந்த கழகத்தினர்!



நெல்லை ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க.சார்பில் பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்தியது போல் வீடியோ வெளியிட்ட த.வெ.க. அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்யக்கோரி நெல்லை வண்ணார்பேட்டை செல்லப் பாண்டியன் பாலம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.தடையை மீறி நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மூன்று மாவட்ட பொறுப்பாளர்கள்,முன்னாள் அமைச்சர் மைதீன் கான்,முன்னாள் எம்.பி.க்கள் ஞானதிரவியம்,விஜிலா சத்யானந்த்,முன்னாள் எம்.எல்.ஏ. மாலைராஜா,உள்பட 500 க்கும் மேற்பட்ட கழகத்தினர் கைது செய்யப்பட்டனர்.



சிவகங்கை சண்முகராஜா கலையரங்கில் கழக தலைவர் தளபதி அவர்கள் உத்தரவின்படி மாணவரணி சார்பில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற மாவட்ட கழக துணைசெயலாளர் த.சேங்கைமாறன், நகர செயலாளர் துரை.ஆனந்த் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் மற்றும் ஒன்றிய, நகர பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி சார்பில் பொதுவெளியில் போதைப்பொருள் பயன்படுத்தியதாக வீடியோ வெளியான விவகாரத்தில் த.வெ.க. அமைச்சர் சரத்குமாரை பதவி விலக கோரி தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகே ஆர்ப்பாட்டம் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார்,தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலை கதிரவன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.தடையை மீறி நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன், மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ. உள்பட 200 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.



மதுரை வடக்கு, மதுரை மாநகர், மற்றும் மதுரை தெற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் த.வெ.க. அரசு அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி மதுரை பழங்காநத்தம் ரவுண்டானாவில் போலீசாரின் தடையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடு முயன்ற கழக மாணவர் அணி அமைப்பாளர்கள் ஆதிசங்கர், அன்பு என்கிற துரை கோபால்சாமி, பாண்டி முருகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், தமிழரசன் உள்ளிட்ட மாணவர் அணியினர் மற்றும் கழக நிர்வாகிகளை போலீசார் வலுக்கட்டாயமாக கைது செய்து திருமண மண்டபத்தில் அடைத்து வைத்தனர், திருமண மண்டபத்தில் அடைக்கப்பட்டவர்களை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவித்தார்.



சேலம் மாநகரம் கோட்டை மைதானத்தில் மாணவரணி சார்பில் ஆர்ப்பாட்டம் செய்ய முயன்றபோது, மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் இரா.இராஜேந்திரன், சி.இராஜேந்திரன், எம்.எம்.ஷெரீப், எஸ்.ஆர்.அன்வர், மாணவரணி அமைப்பாளர்கள் ஆர்.கோகுல் காளிதாஸ் மணிகண்டன் மற்றும் ஏராளமானோர் கைது செய்யப்பட்டனர்.



இராமநாதபுரம் மாணவரணி சார்பில் ”போதை பழக்கம் கொண்ட த.வெ.க. அமைச்சரையும் த.வெ.க. அரசையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ராமேஸ்வரம் பேருந்து நிலையம் அருகே இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதில் கூட்டத்தில் மாணவரணி சார்பாக அமைப்பாளர் உட்பட நிர்வாகிகள் மற்றும் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கே கதிரவன் ராமேஸ்வரம் நகர் மன்ற தலைவர் நாசர் கான், இராமநாதபுரம் நகர்மன்ற தலைவர் ஆர்.கே.கார்மேகம் உட்பட , மாநில/மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளாளர்கள், அனைத்து அணி மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், மாணவரணி ஒன்றிய அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் என 500க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு போலீசாரால் கைது செய்யப்பட்டு தனியார் மஹாலில் தங்க வைக்கப்பட்டனர்.




தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி சார்பில் பொதுவெளியில் போதை பொருள் பயன்படுத்தியதாக வீடியோ வெளியான விவகாரத்தில் த.வெ.க. அமைச்சர் சரத்குமாரை பதவி விலக கோரி சிவகிரி காந்திசிலை அருகே ஆர்ப்பாட்டம் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.தடையை மீறி நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. தலைமைச் செயற்குழு உறுப்பினர் சீனிவாசன்,மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம்,வாசு ஒன்றிய குழு தலைவர் பொன்.முத்தையாபாண்டியன் உள்பட சுமார் 100 பேர் கைது செய்யப்பட்டனர்.




த.வெ.க. அமைச்சர் சரத்குமார் பதவி விலக வலியுறுத்தி தேனி வடக்கு மாவட்ட மாணவரணி சார்பாக நகர மாணவரணி அமைப்பாளர் ஸ்டீபன் ராஜ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் தங்கபாண்டியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார், மற்றும் ஒன்றிய செயலாளர்கள், நகர செயலாளர், பேரூர் செயலாளர்கள், பேரூராட்சி தலைவர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். தேனி வடக்கு மாவட்டம் பிசி பட்டியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றவர்களை காவல்துறையினர் கைது செய்தனர்.



த.வெ.க அமைச்சர் சரத்குமாரை கண்டித்து மாவட்ட தி.மு.க. மாணவரணி அமைப்பாளர் கருப்புராஜா தலைமையில் காரியாபட்டி பேருந்து நிலையம் முன்பு தி.மு.க. மாணவர் அணியினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காரியாபட்டி போலீசார் 40க்கும் மேற்பட்டோரை கைது செய்து தனியார் மண்டபத்தில் அடைத்துள்ளனர்.